Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.69/2023 Date:02.07.2026
Deposition of witness for prosecution: PW1 ( LW 1)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | சதீஷ்குமார் | Village | கம்பம் |
| Father/ Husband Name | கிருஷ்ணமூர்த்தி | Taluk | உத்தமபாளையம் |
| Age | 40 /2026 | Calling | ஓட்டுநர் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 02.07.2026 TIME 01.25 to 01.35 **PM**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

நான் தற்போது கம்பத்தில் குடியிருந்து வருகிறேன். தேதி மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 4 வருடத்திற்கு முன்பு எங்களது வீட்டில் இருந்த போது, கூட்டமாக இருந்தார்கள். என்ன சத்தம் என பார்ப்பதற்கு நான் சென்றபோது அங்கே ஏற்பட்ட தள்ளுமுள்ளில் எனக்கும், எனது அம்மாவும் கீழேவிழுந்ததில் ஊமைக்காயம் ஏற்பட்டது. நடந்த சம்பவத்தைப் பற்றி காவல் நிலையத்தில் சொல்வதற்கு சென்றபோது காவல் நிலையத்தில் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டபடும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அது **அசாஆ.1** ஆகும். புகாரில் எழுதியுள்ள விபரம் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 23.10.2022–ம் தேதி இரவு 09.00 மணியளவில் எதிரிகள் இருவரும் எனது வீட்டின் முன்பு மது அருந்தி கொண்டிருந்ததை கேட்டது குறித்து எதிரிகள் இருவரும் வாய்தகராறில் ஈடுபட்டார்கள் என்றும், அருகில் இருந்தவர்கள் விலக்கிவிட்டார்கள் என்றும், அப்போது சென்று விட்ட எதிரிகள் மீண்டும் மறுநாள் 24.10.2022–ம்தேதி காலை 08.30 மணிக்கு நான் வீட்டில் இருந்த போது, அங்கு வந்த எதிரிகள் கையில் கம்பியுடன் வீட்டிற்குள் வந்து அசிங்கமாக பேசி, கையில் ைவ்ததிருந்த கம்பியால் என்னை எனது தலையிலும், வலது முழங்கையிலும் அடித்து இரத்த காயத்தை ஏற்படுத்தினார்கள் என்றும், கையில் ஊமைக்காயத்தை ஏற்படுத்தினார் என்றும், தடுக்க வந்த எனது அம்மாவையும் அசிங்கமாக பேசி, கம்பியால் எனது அம்மாவை வலது மணிக்கட்டில் அடித்ததில் வீக்க காயம் ஏற்பட்டது என்றும், நெஞ்சில் அடித்து ஊமைக்காயத்தை ஏற்படுத்தினார்கள் என்றும், கையில் வைத்திருந்த கம்பியை காட்டி கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றும், புகாரிலும், போலிசார் விசாரணையிலும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சாியல்ல. நான் தற்போது எதிரிகளுடன் சமரசமாகி நீதிமன்றத்தில் சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.
Sd/P. kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.69/2023 Date:02.07.2026
Deposition of witness for prosecution: PW2 ( LW 2)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | அருள்மொழி | Village | கம்பம் |
| Father/ Husband Name | கிருஷ்ணமூர்த்தி | Taluk | உத்தமபாளையம் |
| Age | 63 /2026 | Calling | ---- |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 02.07.2026 TIME 01.25 to 01.35 **PM**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

நான் தற்போது கம்பத்தில் குடியிருந்து வருகிறேன். தேதி மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 4 வருடத்திற்கு முன்பு எங்களது வீட்டில் இருந்த போது, கூட்டமாக இருந்தார்கள். என்ன சத்தம் என பார்ப்பதற்கு நான் சென்றபோது அங்கே ஏற்பட்ட தள்ளுமுள்ளில் எனக்கும், எனது மகனுக்கும், கீழேவிழுந்ததில் ஊமைக்காயம் ஏற்பட்டது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 23.10.2022–ம் தேதி இரவு 09.00 மணியளவில் எதிரிகள் இருவரும் எனது வீட்டின் முன்பு மது அருந்தி கொண்டிருந்ததை கேட்டது குறித்து எதிரிகள் இருவரும் வாய்தகராறில் ஈடுபட்டார்கள் என்றும், அருகில் இருந்தவர்கள் விலக்கிவிட்டார்கள் என்றும், அப்போது சென்று விட்ட எதிரிகள் மீண்டும் மறுநாள் 24.10.2022–ம்தேதி காலை 08.30 மணிக்கு நான் வீட்டில் இருந்த போது, அங்கு வந்த எதிரிகள் கையில் கம்பியுடன் வீட்டிற்குள் வந்து அசிங்கமாக பேசி, கையில் ைவ்ததிருந்த கம்பியால் என்னை எனது மகனின் தலையிலும், வலது முழங்கையிலும் அடித்து இரத்த காயத்தை ஏற்படுத்தினார்கள் என்றும், கையில் ஊமைக்காயத்தை ஏற்படுத்தினார் என்றும், தடுக்க வந்த என்னை அசிங்கமாக பேசி, கம்பியால் வலது மணிக்கட்டில் அடித்ததில் வீக்க காயம் ஏற்பட்டது என்றும், நெஞ்சில் அடித்து ஊமைக்காயத்தை ஏற்படுத்தினார்கள் என்றும், கையில் வைத்திருந்த கம்பியை காட்டி கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றும், போலிசார் விசாரணையிலும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சாியல்ல. நான் தற்போது எதிரிகளுடன் சமரசமாகி நீதிமன்றத்தில் சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/P. kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.